

பாடம் 13

ஜூன் 22-28

# வெற்றிபெறும் தேவன்பு

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** வெளி 22:11, 12; எரே 30:5–7; சங் 91:1–11; எரே 25:33; வெளி 21:2; வெளி 20: 11–15.

**மனன வசனம்:** பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. வெளி 21:3,4.

நம்பிக்கைநிறைந்த இருதயத்தோடு நாம் எதிர்காலத்தைச் சந்திக்கலாம். சவாலான காலங்கள் வரவிருந்தாலும், துன்பங்கள் பலவேற்றை அனுபவிக்க நேர்ந்தாலும், சிறந்த எதிர்காலம் வரப்போகிறது என்கிற நம்பிக்கை இருந்தால் அர்த்தமுடைய ஒரு வாழ்க்கையை இன்று நாம் வாழலாம். 1933-1945 வரை அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் ஃபிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட்; அக் காலக்கட்டம் அமெரிக்க வரலாற்றில் பல சவால்கள் நிறைந்து காணப்பட்டது. அவர் போலியாவால் பாதிக்கப்பட்டு, பிறர் உதவியின்றி நடக்கமுடியாமல் ஆனார். அவர் சொல்கிறார்: ‘நம் கண்ணுக்குத் தெரியாத ஒரு சிறந்த வாழ்க்கை, ஒரு சிறந்த உலகம் இருக்கிறது என்கிற நம்பிக்கையோடு, எதிர்பார்ப்போடு, உணருதலோடு வாழ்கிறோம்’. உலகின் மிகச்சிறந்த அறிஞர்களில் ஒருவரான ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், ‘நேற்றைய தினத்திலிருந்து பாடம் கற்போம்; இன்றைக்காக வாழுவோம்; நாளையதினம் குறித்து நம்பிக்கையோடு இருப்போம்’ என்று எழுதினார். விக்டோரியா மகாராணியின் காலத்தில் வாழ்ந்த பிரபல ஆங்கில கவிஞரான ஆல்ஃப்ரட் லார்ட் டென்னிசன், ‘வரவிருக்கிற வருடங்களின் விளம்பிலிருந்து நம்பிக்கை புன்னகைக்கிறது, அது மகிழ்ச்சியாக இருக்குமென கிசுகிசுக்கிறது8 என்று எழுதினார்.

பிரபஞ்ச வரலாற்றின் மிகவும் பரபரப்பான சமயத்திலும் கிறிஸ்து தம் அன்பில் குறைவற்றவராக இருந்ததையும், நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கிற போரில் முழு வெற்றிபெற்றதையும் பார்ப்போம். வேதாகமத்தின் கடைசிப் புத்தகமான வெளிப்படுத்தல், இன்றைக்கும் நாளைக்கும் என்றைக்கும் நம்பிக்கை கொடுக்கிறது.

***மாபெரும் போராட்டம், 39-42ம் அதிகாரங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்த வாரப் பாடம் 2024, ஜூன் 29 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்.***

# ஆபத்துக்காலத்தில் நம்பிக்கை

**இரண்டாம் வருகைக்குச் சற்றுமுன் என்னென்ன நிகழ்வுகள் நிகழ்கின் றன? வெளி 22:11,12; தானி 12:1,2; எரே 30:5-7.**

---

---

மனிதர்களுக்குக் கொடுக்கப்படும் தவணையின் காலம் முடிவடைந்ததும், 'யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத' ஆபத்துக்காலம் வரும். துன்மார்க்க உலகத்தின்மீது ஊற்றப்படப்போகிற கடைசி ஏழு வாதைகள்பற்றி வெளி 16 விவரிக்கிறது. தேவமக்கள் அவற்றிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள். தானியேல் புத்தகம், 'அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடு விக்கப்படுவார்கள்' என்று வாக்குரைக்கிறது. தானி 12:1. அது 'ஜீவ புத்தகத்தைத் தான்' குறிப்பிட்டிருக்க வேண்டும். பிலி 4:3; வெளி 13:8; வெளி 20:12, 15; வெளி 22:19. நாம் இயேசுவுக்கு உண்மையாக வாழ்ந்தால், நம் பெயர்கள் ஜீவபுத்தகத் திலிருந்து அழிக்கப்படுவதில்லை. வெளி 3:5.

**வரப்போகிற ஆபத்துக்காலத்திற்காக ஆயத்தப்படுவதற்கு போதுமான ஒரே விஷ யம் என்ன? 1யோவான் 3:1-3; யோவான் 8:29; 14:30.**

---

ஆபத்துக்காலத்தில், தேவபிள்ளைகள் இயேசுவோடு வைத்திருக்கிற ஆழமான உறவுதான் அவர்களைக் காப்பாற்றும்; எதாலும் மாற்றமுடியாத அள வுக்கு அது ஆழமாக இருக்கும். சகலத்திலும் அவரைப் பிரியப்படுத்துவதே அவர்களுடைய இறுதி ஆசையாக இருக்கும்; அதனால் ஆவியானவருடைய கிரியைமூலம் அவரைப் போல பரிசுத்தர்களாக முடியும். கிறிஸ்துவின் இருதயம் சிறிதளவுகூட சாத்தானுடைய வஞ்சகங்களுக்கு இணங்கவில்லை. நாமும்கூட அவரது குணத்தின் அந்த அம்சத்தைப் பிரதிபலிக்கமுடியும்.

**ஆபத்துக்காலம் சம்பந்தமாக தேவன் நமக்குக் கொடுக்கிற உறுதியான வாக்குறுதி கள் என்ன? சங் 27:5; சங் 91:1-11; வெளி 3:10-12.**

---

ஆபத்துக்காலத்தில் பரிந்துபேச எவரும் இருக்கப்போவதில்லை என் பதை சிலர் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் பக்கமா இல் லையா என்று ஒவ்வொருவரும் இறுதியாகத் தீர்மானித்து முடிந்ததும், பரலோ கத்தில் பரிந்துபேசுகிற ஊழியத்தை இயேசு நிறைவுசெய்கிறார். அதற்காக அந் தச் சமயத்தில் நம் சொந்தப் பெலத்தை நம்பிதான் நிற்கவேண்டும் என்று அர்த்த மில்லை. முடிவுபரியந்தமும் நம்மோடு இருப்பதாக இயேசு வாக்குரைத்திருக் கிறார். மத் 28:20. நம்மைச் சுற்றிலும் உலகத்தில் பேரழிவு நிகழ்ந்தாலும், காண முடியாததை நம்புவதுதான் விசுவாசம். ஆபத்துக்காலத்தின்போது, நம் விசு வாசம் பெலப்படுகிறது; நித்தியவாழ்வுக்கான ஏக்கம் அதிகரிக்கிறது; எனவே, நம் ஒரே ஆசை இயேசுவோடு என்றென்றும் வாழ்வதாகத்தான் இருக்கும்.

# இயேசுவின் சீக்கிர வருகையில் நம்பிக்கை

**எதிர்காலச் சவால்களின் பின்னணியில், பின்வரும் வசனங்கள் எவ்வாறு ஊக்க மளிக்கின்றன? யோவான் 14:1-3; தீத்து 2:11-14.**

---

'உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக' என்று இயேசு சொன்னார்; அவர் நம்மைக் கைவிடமாட்டார்; நம்மை அழைத்துச் செல்ல வருகிறார் என்பதை இந்த வார்த்தைகள் உறுதிப்படுத்துகின்றன. இந்த உலகம் நம் வீடல்ல. நம்பிக்கை மிக்க ஒரு நாள் வருகிறது. புதிய ஏற்பாடு 25 வசனங்களுக்கு ஒருமுறை, நம் கர்த்தருடைய வருகைபற்றிப் பேசுகிறது. சூழ்நிலை அந்தகாரமாகி, சபையும் அரசும் இணைந்த வல்லமை நம் உயிருக்கு அச்சுறுத்தலை உண்டாக்கும்போது, கிறிஸ்துவின் வருகைகுறித்த வாக்குறுதி நம் இருதயங்களை நம்பிக்கையால் நிறைக்கிறது. இதுவே, ஒவ்வொரு தலைமுறையிலும் தேவனுடைய உண்மை மக்களை ஊக்குவித்த 'பாக்கிய நம்பிக்கையாக' இருக்கிறது.

**இரட்சிக்கப்பட்டவர்களின் மனநிலைபற்றியும், இரட்சிப்பை இழந்தவர்களின் மனநிலைபற்றியும் வெளி 6:15-17; ஏசா 25:8,9 என்ன சொல்கின்றன?**

---

பாவத்தின் கொடிய விளைவுகளை துன்மார்க்கர் உணர்ந்துகொள்கிறார்கள்; அதேசமயம் நீதிமான்கள், கிருபையின் அற்புத ஏற்பாடுகளை ஏற்றுக்கொள் கிறார்கள். தேவனுக்கு எதிரான கலகமானது பயத்திற்கும் குற்றவுணர்வுக்கும் ஆக்கினை எண்ணத்திற்கும் நித்திய அழிவுக்கும் வழிவகுக்கிறது. அவரது இரட் சண்ய கிருபையை ஏற்றுக்கொண்டால், நமக்குப் பாவமன்னிப்பு, சமாதானம், அவரது வருகையில் நித்திய சந்தோஷம் ஆகியவை கிடைக்கும்.

**கிறிஸ்துவின்மூலம் இலவசமாக அருளப்பட்டுள்ள மகிமையான இரட்சிப்பை மீட் கப்பட்டவர்கள் எவ்வாறு அணுகுகிறார்கள்? வெளி 15:3,4; வெளி 19:7.**

---

---

'கிறிஸ்துவின் சிலுவையே நித்தியகாலம் முழுவதிலும் மீட்கப்பட்டவர் களுடைய ஆராய்ச்சியும் பாடலுமாக இருக்கும். மகிமையடைந்த கிறிஸ்துவில் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைக் காண்பார்கள். உலகங்களையெல்லாம் படைத்து, அனைவருடைய முடிவுகளையும் தீர்மானிக்கிறவர் மனிதன்மேலான அன்பால் தம் மகிமையை ஒதுக்கிவைத்து, தம்மைத் தாழ்த்தவேண்டியிருந்தது என்பது பிரபஞ்சம் எப்போதும் ஆச்சரியம் கொள்ளவும் தொழவும் தூண்டிக் கொண்டே இருக்கும்'.[1]

[1] Ellen G. White, The Great Controversy, p. 651.

---

**வெளி 12:17; வெளி 17:13,14; வெளி 19:11-16 படிப்படியாக சொல்கிற விஷயங்களைக் கவ னியுங்கள். பூமியின் கடைசி யுத்தம்பற்றியும், கிறிஸ்துவின் இறுதி வெற்றிபற்றியும் தொடர்நிகழ்ச்சி கள் என்ன உண்மையைக் காட்டுகிறது?**

# பூமியில் ஆயிரவருடம்

இயேசுவின் வருகை, துன்மார்க்கரின் அழிவோடு வெளி 19 முடிவடைகிறது. ஆனால் அதோடு எல்லாம் முடியவில்லை. 'ஆயிரவருட அரசாட்சி' எனப்படும் 1000 வருடங்கள்பற்றி வெளி 20 சொல்லுகிறது.

**இயேசு வரும்போது சாத்தானின் நிலை எப்படி இருக்கும்? வெளி 20:1-3.**

---

அந்தக் காட்சியை வெளி 20:1-3 அடையாளமாகச் சொல்கிறது. 1000 வருடங்களுக்கு அவன் மக்கள் சஞ்சாரமற்ற, பாழான ஓர் இடத்தில், தானே உருவாக்கிய சூழ்நிலைகளுக்குள்ளாக அடைப்பட்டிருப்பான். 2பேதுரு 2:4இல், சாத்தானும் அவனது தூதர்களும் 'அந்தகாரச் சங்கிலிகளினாலே' கட்டப்பட்டு, தண்டனை பெற வைக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. சோதிக்க யாருமின்றி, சூழ்நிலைச் சங்கிலிகளால் சாத்தான் பூமியில் கட்டப்பட்டிருப்பான். தன் கலகம் உருவாக்கிய பேரழிவை 1000 வருடங்களாகப் பார்த்துக் கொண்டிருப்பான்.

'பாதாளம்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தைதாம் பேரழிவான சூழல் என்பதற்கும் ஆங்கிலத்தில் வருகிறது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பான செப்டூவஜிண்டில், சிருஷ்டிப்பின்போது பூமி இருந்த நிலையை விவரிக்க இதே வார்த்தைதான் பயன்பட்டுள்ளது. 'பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது'. ஆதி 1:2. செப்டூவஜிண்ட் வேதாகமத்தில் 'ஆழம்' என்பதற்கான கிரேக்க வார்த்தை அபிஸோ; பேரழிவான சூழ்நிலை என்று அர்த்தம். பாதாளம் என்பது பிரபஞ்சநிலப்பரப்பிற்கு கீழிருக்கிற குகை அல்லது பெரும்பிளவு என்று அர்த்தமல்ல. சாத்தான் ஆரம்பித்து வைத்த பாவமும் அழிவும், இரண்டாம் வருகைக்கு முன் உண்டாக்கிய பெரும் குழப்பத்தால் பூமியானது சிருஷ்டிப்பின் துவக்கத்தில் இருந்ததுபோல ஒழுங்கற்ற நிலைக்கு வந்துவிடுகிறது.

**இந்தக் காட்சியை வேதாகமத் தீர்க்கதரிசிகள் எவ்வாறு விவரிக்கிறார்கள்? எரே 4:23-26; எரே 25:33.**

---

---

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நிலவுகிற பேரழிவான சூழலை தீர்க்கதரிசிகள் இங்கு வலியுறுத்துகிறார்கள்; இந்த ஆயிர வருடத்தில் பூமியில் ஒரு மனிதனும் உயிரோடு இருப்பதில்லை. சாத்தானுடைய கலகத்தால் உண்டான குழப்பத்தை யோசித்துப் பார்க்க, அவனும் அவனது தூதர்களும் தனியே விடப்படுகிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை பிரபஞ்சம் முழுவதும் உணர்ந்துகொள்கிறது. பாவப்பிரச்சினை மீண்டும் எழும்பாத அளவுக்கு தேவன் அதைக் கையாளுகிறார். நாகூம் 1:9. மூன்று முக்கிய வழிகளில் தேவன் இதைச் செய்கிறார். முதலாவது, மனிதர்கள் அனைவரையும் இரட்சிக்க அளவற்ற அன்போடும், மிகுந்த ஆர்வத்தோடும், விடாமுயற்சியோடும் தாம் இருப்பதை வெளிப்படுத்துகிறார். இரண்டாவது, தம் நீதி, நியாயம், நேர்மை ஆகியவற்றை வெளிப்படுத்துகிறார். மூன்றாவது, பாவம் மற்றும் கலகத்தின் இறுதி விளைவுகளை பிரபஞ்சம்முழுவதும் காணும்படி அனுமதிக்கிறார்.

# ஆயிரவருட அரசாட்சியில் நியாயத்தீர்ப்பு

**அந்த 1000 வருடங்களின்போது நீதிமான்கள் என்ன செய்கிறார்கள், அது ஏன் மிகமுக்கியமான ஒன்று?**

ஆயிரவருட அரசாட்சியின்போது, பாவப்பிரச்சினையை தேவன் அணுகினதில் வெளிப்பட்ட அவரது நியாயத்தையும் அன்பையும் முதன்முதலாகக் காண்கிற பாக்கியம் நீதிமான்களுக்குக் கிடைக்கிறது. எல்லாருக்குமே தேவனிடம் கேட்கவேண்டிய கேள்விகள் பல இருக்கும் அல்லவா? பரலோகத்தில் ஆயிர வருட அரசாட்சியின்போது, மீட்கப்பட்டவர்கள் அந்தக் கேள்விகளைக் கேட்கலாம். பிரியமான ஒருவர் பரலோகத்திற்கு வராமல் இருந்தால், தேவனுடைய தீர்மானத்திற்கான காரணங்களை முற்றிலும் புரிந்துகொள்கிற வாய்ப்பு மீட்கப்பட்டவர்களுக்குக்கிடைக்கிறது. பூமியில் வாழ்ந்த ஒவ்வொரு மனிதனையும் இரட்சிப்பதற்கு தேவன் எடுத்த முயற்சிகளை மீட்கப்பட்டவர்கள் புதிய வெளிச்சத்தில் புரிந்துகொள்கிறார்கள். பரலோகத்திற்கு வராத ஒவ்வொருவரும் கிறிஸ்துவைப் புறக்கணிக்க தாங்களே தீர்மானித்ததே காரணம் என்கிற புதிய புரிதல் கிடைக்கிறது. அதன் பிறகுதான், 1000 வருடங்கள் முடியும்போது, இரட்சிப்பை இழந்தவர்கள்மீது தேவன் இறுதி நியாயத்தீர்ப்பைச் சொல்லுகிறார்; அது, இரண்டாம் மரணமாகிய நித்திய மரணமாகும்.

**1000 வருடங்கள் முடிந்ததும் சாத்தான் என்ன செய்கிறான்? வெளி 20:7-9. சாத்தானுக்கும் அவனைப் பின்பற்றுகிறவர்களுக்கும் இறுதியில் என்ன ஆகிறது?**

1000 வருடங்களாக, சோதிக்கவோ வஞ்சிக்கவோ சாத்தானுக்கு யாரும் இருக்கவில்லை. பாவத்தின் கொடிய விளைவுகளைச் சிந்திக்கும்படி அவனும் அவனது தூதர்களும் தனியே விடப்பட்டார்கள். ஆயிர வருட அரசாட்சியின் முடிவில், மரித்த துன்மார்க்கர் நியாயத்தீர்ப்பை அடையும்படி உயிரோடு எழுப்பப்பட்டு, தங்கள் இறுதி பலனைப் பெறுகிறார்கள்.

இப்போது சாத்தானுடைய சேனை பெருந்திரளாக இருக்கிறது. மாபெரும் போராட்டத்தில் சாத்தான் தோல்விக்குமேல் தோல்வியைச் சந்தித்தாலும், இரட்சிப்பை இழந்தோரின் திரளான கூட்டத்தைக் கண்டு அவன் ஊக்கமடைகிறான். தன் கலகத்தை விட்டுவிடமனதின்றி, அந்த 'ஜாதிகளை' வஞ்சிக்கப் புறப்படுகிறான். தேவனை வீழ்த்தவும், தங்கள் சொந்த ராஜ்யத்தை நிறுவவும் கடைசியாக ஒரு பெரிய முயற்சியை எடுக்கலாமென அவர்களைத் தூண்டுகிறான். 'கோகையும் மாகோகையும்' என்பது அடையாள வார்த்தைகள்; சாத்தானையும் எல்லாக் காலங்களையும் சேர்ந்த தொலைந்துபோனோரையும் காட்டுகின்றன. சாத்தானும் அவனைப் பின்பற்றுகிறவர்களும் 'பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்8. வெளி 20:9.

ஆயிரவருட அரசாட்சியின் முடிவில், துன்மார்க்கர் அனைவரும் உயிரோடு எழுப்பப்படுவதோடுகூட, பரிசுத்த நகரமாகிய எருசலேம், பரலோகத்திலிருந்து பூமிக்கு இறங்கிவருகிறது. வெளி 21:2. ஆயிரம் வருடங்களாக புதிய எருசலேமில் பரிசுத்தவான்கள் கிறிஸ்துவோடு வாழ்கிறார்கள், அரசாளுகிறார்கள். இப்போது 1000 வருடங்கள் முடிந்த நிலையில், தேவனோடும், இயேசுவோடும், தூதர்களோடும், மீட்கப்பட்ட அனைவரோடும்கூட அந்த நகரம் பூமிக்கு இறங்கி வருகிறது. மாபெரும் போராட்டத்தின் இறுதி யுத்தத்தில் அனைவருமே பங்கேற்கிறார்கள். பாவம் நிரந்தரமாக அழிக்கப்படவிருக்கிறது!

---

**இறுதி நியாயத்தீர்ப்பின் வேளையானது தேவனுடைய குணம்பற்றிச் சொல்லுவது என்ன?**

# இரண்டு நித்தியங்கள்

**துன்மார்க்கர் மீண்டும் உயிரோடு எழுப்பப்படுவதற்கான காரணம்பற்றி இந்த வசனங்கள் சொல்லுவது என்ன? 2 கொரி 5:10; ரோமர் 14:10, 11; வெளி 20:11-15.**

---

தீமை மீண்டும் தலைதூக்காதபடிக்கு பாவப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமானால், தேவன் தம் வழிகளிலெல்லாம் நீதியும் நேர்மையுமாக நடந்துகொண்டதை அனைவரும் உணரவேண்டும். இறுதியில், முழங்கால் யாவும் முடங்கி, மாபெரும் போராட்டத்தில் தேவன் நியாயமுள்ளவராக இருந்ததை அறிக்கையிடுவார்கள்; சாத்தானும் அவனது தூதர்களும்கூட அறிக்கையிடுவார்கள். தேவனுக்கு எதிரான கலகத்திற்கு சாக்குப்போக்குச் சொல்ல ஒன்றுமே இருக்காது. எலன் ஒய்ட் இவ்வாறு சொல்லுகிறார்: 'பதிவுப்புத்தகங்கள் திறக்கப்பட்டதுமே, இயேசுவின் கண் துன்மார்க்கரைப் பார்க்கிறது, தாங்கள் செய்த ஒவ்வொரு பாவமும் அவர்களுடைய நினைவில் நிற்கிறது. தங்களது பாதங்கள் எந்த இடத்தில் தூய்மையும் பரிசுத்தமுமான பாதையிலிருந்து விலகின என்பதையும், பெருமையும் கலகமும் எவ்வளவு தூரம் தேவனுடைய பிரமாணத்தை மீறும்படி செய்தன என்பதையும் காண்கிறார்கள். பாவத்தில் ஈடுபட்டு அதனால் மருட்சியான பாவச் சோதனைகளை ஊக்குவித்ததும், ஆசீர்வாதங்களை மாறுபாடாக்கினதும், தேவனுடைய தூதுவர்களைப் புறக்கணித்ததும், எச்சரிப்புகளை நிராகரித்ததும், பிடிவாதமும் மனந்திருந்தாததுமான இருதயத்தால் இரக்கத்தின் அலைகளை பின்வாங்கச்செய்ததும் அக்கினியில் பொறித்த எழுத்துகள் போலத் தோன்றுகின்றன.

'பரலோக அரசாங்கத்திற்கு எதிராக மிகப்பெரிய நம்பிக்கைத்துரோகம் இழைத்த குற்றச்சாட்டின் பேரில் துன்மார்க்க உலகம் தேவனுடைய நியாயசங்கத்தின்முன் நிற்கிறது. அவர்களுக்காக வழக்காட யாருமில்லை; அவர்கள் சாக்குப்போக்குச் சொல்ல வழியே இல்லை; அவர்களுக்கு எதிராக நித்திய மரணம் தண்டனையாக வழங்கப்பட்டுள்ளது'.

**பாவமும் பாவிகளும் இறுதியாக அழிக்கப்படுவதையும், நீதிமான்கள் பிரதிபலனைப் பெறுவதையும்பற்றி வெளி 20:9; சங் 37:20; மல் 4:1,2. என்ன சொல்லகின்றன?**

நற்செய்தி என்னவென்றால், சாத்தானும் அவனது தூதர்களும் அக்கினிக் கடலில் அழிக்கப்படுவார்கள். பாவத்தையும் பாவிகளையும் அது பொசுக்கி விடும். நித்தியமாகச் சித்திரவதைப்படுத்துவதில்லை. வெளி 20:9. அதற்கு அடுத்த வசனம் 'சதாகாலங்களிலும்8 என்று சொல்கிறது. அந்த வசனத்தின் பின்னணியில், அதற்கு 'முடிவில்லாத' என்று அர்த்தம் இல்லை; 'முற்றிலும் அழிக்கப்படுகிறவரையிலும்' என்று அர்த்தம். யாத் 21:6; 1சாமு 1:22,28; யூதா 7; 2பேதுரு 2:4-6. இரட்சிப்பை இழந்தவர்களுக்கு, அவர்களை அழிக்கிற செயலல்ல; அழிவுதான் நிரந்தரமாக இருக்கும். தேவன் நித்தியமாக வாதிப்பவர் அல்ல.

---

**முடிவில், இரண்டு நித்தியங்களில் ஏதாவது ஒன்று நமக்குக் காத்திருக்கிறது. தொலைந்து போனவர்கள், தங்கள் 'சம்பளத்தை' பெறுகிறார்கள்; அது, நித்திய மரணம். அப்படியானால், நாம் பெறத் தகுதியான மரணத்தைப் பெறாதபடிக்கு நம்முடைய நம்பிக்கை ஏன் இயேசுவை நம்புவதில்மட்டுமே உள்ளது?**

# மேலும் படிக்க:

'அங்கே பரந்து விரிந்த சமவெளிகள் அழகுநிறைந்த மேடுகளாக எழுந்து நிற்கும்; அவற்றின் உயரமான சிகரங்களுக்குப் பின்னால் தேவனுடைய பர்வதங்கள் தெரியும். அமைதியான அந்தச் சமவெளிகளில், வற்றாத அந்த நீரோடைகளுக்கு அருகே, வெகுகாலம் பரதேசிகளாக அலைந்துதிரிந்த தேவ ஜனங்கள், வீடுகளைக் கட்டித் தங்குவார்கள்.... 'அங்கே அழியாமைபெற்றவர்களின் சிந்தைகள் ஒருபோதும் குறையாத மகிழ்ச்சியோடு சிருஷ்டிப்பு வல்லமையின் மகத்துவங்களையும், மீட்கிற அன்பின் மறைபொருள்களையும் தியானிக்கும். அங்கே தேவனை மறக்கச்செய்யும்படி வஞ்சிக்கிற சத்துரு யாரும் இருப்ப தில்லை. ஒவ்வொரு மனத்திறனும் வளர்ச்சியைடயும்; ஒவ்வொரு திறமையும் அதிகரிக்கும். அறிவைப் பெறுவதில் அவர்களுடைய மனது சோர்ந்து போவதில்லை அல்லது ஆற்றல்கள் வற்றுவதும் இல்லை. அங்கே மிகப்பிரமாண்டமான திட்டங்களைச் செயல்படுத்தலாம்; மிக உயர்ந்த இலட்சியங்களை அடையலாம்; மிகப்பெரிய ஆசைகளை நிறைவேற்றலாம்; அதற்குப் பின்னும் எட்டவேண்டிய புதுப்புது உயரங்களும், வியக்கவேண்டிய புதுப்புது அற்புதங்களும், புரியவேண்டிய புதுப்புது உண்மைகளும் இருக்கும்; உடல், மன, ஆத்தும திறன்களைச் செயல்படவைக்கிற புதிய நோக்கங்களும் இருந்துகொண்டே இருக்கும்'.

'பூமியின் புத்திரர்கள் சொல்லொண்ணா மகிழ்ச்சியோடு விழுந்துபோகாத ஜீவிகளின் மகிழ்ச்சிக்குள்ளும் ஞானத்திற்குள்ளும் பிரவேசிக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய கையின் கிரியைகளை யுகம்யுகமாகச் சிந்தித்து, தாங்கள் பெற்ற அறிவின் புரிதலையும் பொக்கிஷங்களையும் பகிர்ந்துகொள்கிறார்கள். மங்காத பார்வையுடன் சிருஷ்டிப்பின் மகிமையைக் காண்கிறார்கள்; சூரியன்களும் நட்சத்திரங்களும் மண்டலங்களும் அனைத்தும் தங்களுக்கு நியமிக்கப்பட்ட வரிசையில் தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றுகின்றன. சிறியதுமுதல் பெரியதுவரை, அனைத்தின்மீதும் சிருஷ்டிகரின் நாமம் எழுதப்பட்டிருக்கிறது; அவை அனைத்திலும் அவரது வல்லமையின் ஐசுவரியங்கள் வெளிப்படுகின்றன'.

'மாபெரும் போராட்டம் முடிந்தது. இனி பாவமும் பாவிகளும் இல்லை. பிரபஞ்சம் முழுவதும் பரிசுத்தமாயிருக்கிறது. இணக்கமும் மகிழ்ச்சியும் ஒரு சுதியுடன் பரந்த சிருஷ்டிப்புமுழுவதிலும் இசைக்கிறது. சகலத்தையும் சிருஷ்டித்தவரிடமிருந்து ஜீவனும் ஒளியும் மகிழ்ச்சியும் புறப்பட்டு, எல்லையே இல்லாத மண்டலங்கள் முழுவதும் ஓடுகின்றன. மிகச்சிறிய அணுமுதல் மிகப்பெரிய அண்டம்வரை, உயிருள்ளவையும் உயிரற்றவையுமான சகலமும், ஒளிவுமறைவற்ற அழகோடும், பூரண மகிழ்ச்சியோடும் தேவன் அன்புள்ளவர் என்று அறிவிக்கின்றன'.

## கலந்துரையாடக் கேள்விகள்

1 *பாவத்தை இவ்வளவு நீண்டகாலம் தேவன் அனுமதித்ததற்கான காரணம் என்ன? அதேநேரம், இந்தப் பூமியில் எந்த மனிதனும், தான் வாழ்ந்த காலத்திற்கும் அதிகமாக பாடனுபவிக்கவில்லை. பாவம் ஆயிரக்கணக்கான வருடங்களாக இருக்கிறது, அதோடு ஒப்பிடும்போது, மனித வாழ்நாள் எவ்வளவு குறுகியது? தீமைபற்றிய கடினமான கேள்வியைக் கையாள, இக்கண்ணோட்டம் எவ்வாறு உதவக்கூடும்?*

2 *ஆயிரவருட அரசாட்சி எவ்வாறு இரட்சிப்பின் திட்டத்தோடு பொருந்துகிறது? மீட்கப்பட்ட அனைவரும் தேவனுடைய நீதி, நியாயம், அன்பு ஆகியவற்றைக் காண்கிற வாய்ப்பைப் பெற்ற பிறகுதான், தொலைந்துபோனோர்மீது இறுதி நியாயத்தீர்ப்பு வழங்கப்படுகிறது; அது தேவனுடைய குணம்பற்றி என்ன சொல்கிறது?*

# ரஷ்யமொழி பேசுகிறவர்களுக்கான புகலிடம்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

உக்ரேனிய போதகரான வாடிம் கிரினிச்னிக்கு, ஸ்பானிஷ் நகரமான வேலன்சியாவில் ரஷ்ய மொழி பேசுகிறவர்களுக்காக ஒரு ஆலயம் ஆரம்பிக்க ஓர் இடத்தைக் கண்டுபிடிப்பது மிகவும் சவாலாக இருந்தது. அதற்காக ஜெபித்தார்கள். மாதம் 500 யூரோ வாடகைக்கு, 100 பேர் அமரக்கூடிய ஓர் அறை வாடகைக்கு கிடைத்தது. "அந்த வாடகைக்கு அது கிடைத்தது பெரிதுதான்" என்று வாடிம் சொன்னார்.

முதலில் 26 பேர்தான் கலந்துகொண்டார்கள்; அவர்களுக்கு அந்த அறை மிகப் பெரிதாக இருந்தது. ஆனால் வாடிம் தொடர்ந்து வெளி ஊழியம் செய்துவந்தார். ஞாயிற்றுக் கிழமைகளில் எல்லாரையும் கூடச்செய்து, கூட்டங்கள் நடத்தி, உணவு கொடுத்தார்கள். ரஷ்யமொழி பேசுகிற சிறுவர்களுக்கு விசேஷித்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. புதுவருடம், ஈஸ்டர் போன்ற நாட்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இசை நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டபோது, அறை நிரம்பி வழிந்தது; சிலசமயங்களில், மிகப்பெரிய அறைகளை வாடகைக்கு எடுக்க வேண்டியிருந்தது. அந்தப் பகுதியிலிருந்து ரஷ்யமொழி பேசுகிற மக்களுடன் அதிக பிணைப்பு ஏற்பட்டதால், அவர்களுக்கான ஒரு மையமாகவே அந்தச் சபை மாறியது. ஸ்பெயினில் ரஷ்யமொழி பேசுகிற மக்கள் 4 லட்சம்பேர் வாழ்கிறார்கள்; அவர்களில் 80 சதவீதம்பேர் வேலன்சியாவிலும், மத்தியத்தரைக்கடல் ஓரத்திலும் தான் இருக்கிறார்கள். இந்த 4 லட்சம்பேரில் குறைந்தது 500 பேர் அட்வென்டிஸ்டுகள்.

ஆனால் புதிய சபையில் முதன்முதலாக ஞானஸ்நானம் பெற்றவர் ரஷ்யரோ, முன்னால் சோவியத் யூனியனைச் சேர்ந்த பகுதியைச் சேர்ந்தவரோ அல்ல. அந்தப் பெண் ஈரானில் பிறந்தவர்; கிறிஸ்தவமல்லாத ஒரு மதத்தில் வளர்ந்தவர். முன்னாள் சோவியத் யூனியனைச் சேர்ந்த பெலாரஸில் 12 வருடங்கள் படித்ததால், ரஷ்ய மொழியை சரளமாகப் பேசுவார்; தெருவில் யாரோ ஒருவர் அழைக்கவே சபைக்கு வந்தவர்.

25 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள்; முன்பு அட்வென்டிஸ்ட் சபைக்கு வந்திருந்த பல குடும்பத்தினர் தங்கள் வாழ்க்கையை மீண்டும் இயேசுவிடம் அர்ப்பணித்தார்கள். வாரா வாரம் 65 பெரியவர்களும் 40 சிறுவர்களும் ஆராதனையில் கலந்துகொள்ள ஆரம்பித்தார்கள்; அப்போதுதான் 2022இல், உக்ரைனில் போர் ஆரம்பித்தது. அந்தப் பிரச்சனையால் குடிபெயர் கிற மக்களுக்கு உதவுகிற வகையில் சபை வளர்ந்திருந்தது. உள்ளூர் தொடர்புகளைப் பயன்படுத்தி, உடனடியாக அகதிகள் மையம் ஒன்றை சபை ஆரம்பிக்க முடிந்தது. போர் ஆரம்பித்து முதல் இரண்டு மாதங்களில், 200 பேர் அந்த மையத்திற்கு வந்திருந்தார்கள்; தங்கினார்கள்; சாப்பிட்டார்கள். அவர்களில் பாதி பேர் அட்வென்டிஸ்டுகள். அதுமுதல் அங்கு அநேகர் உதவி பெற்றிருக்கிறார்கள்.

"ஸ்பெயினில் யாரையும் தெரியாத பலர் எங்களிடம் உதவிக்காக வந்தார்கள். நாங்கள் ரஷ்யமொழி பேசுபவர்கள் என்பதாலேயே எங்களிடம் உதவி கேட்டு வந்தார்கள்" என்றார். போர் ஆரம்பிப்பதற்கு முன்னரே, அகதிகளுக்கு உதவுகிற வகையில் சபையை வளரச் செய்தது தேவன்தாம் என்று சொல்லுகிறார். ஸ்பெயினில் உள்ள ரஷ்யமொழி பேசுகிற மக்கள் அனைவருக்கும் இயேசுவின் சீக்கிர வருகை குறித்த நம்பிக்கையை அறிவிப்பதே தன்னுடைய ஆசை என்று சொல்லுகிறார்.